**மே – 20**

# TNPSC துளிகள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் 58வது ஞானபீட விருதை (2023) சமஸ்கிருத மொழி அறிஞர் ஜகத்குரு இராமபத்ராச்சாரியார் ஜிக்கு வழங்கினார்.
- EOS-9 கண்காணிப்புச் செயற்கைக் கோளினை விண் சுற்றுப்பாதையில் உட்செலுத்தச் செய்வதற்காக இஸ்ரோவினால் மேற்கொள்ளப்பட்ட PSLV ஏவுகலத்தின் 63வது ஏவுதல் செயல்பாட்டில் அதன் நான்கு நிலைகளில் மூன்றாவது நிலை தோல்வியடைந்ததன் காரணமாக வெற்றி பெறவில்லை.
- வணிக அளவிலான உலகின் முதல் மின்னணு மெத்தனால் உற்பத்தி ஆலையானது டென்மார்க்கில் செயல்படத் தொடங்கியது.
- உலக சுகாதார அமைப்பானது, பப்புவா நியூ கினியாவில் போலியோ தொற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக அறிவித்து, உடனடி தடுப்பூசி வழங்கீட்டு நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வேளாண்மையில் எதிர்மறையான வளர்ச்சி விகிதம்


| YEAR | VALUE* (? in lakh) | GROWTH RATE (%) |
|---|---|---|
| 2015-16 | 10091573 | 2.6 |
| 2016-17 | 9928662 | -1.612 |
| 2017-18 | 11127061 | 12.07 |
| 2018-19 | 11849026 | 6.5 |
| 2019-20 | 12749166 | 7.6 |
| 2020-21 | 13321030 | 4.5 |
| 2021-22 | 14071150 | 5.6 |
| 2022-23 | 14423448 | 2.5 |
| 2023-24 | 14987009 | 3.9 |
| 2024-25 | 14972823 | -0.09 |

- எட்டு ஆண்டுகளில் முதல் முறையாக, 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலமானது வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தை எதிர் கொண்டுள்ளது.
- கடந்த ஆண்டு, உண்மையான வளர்ச்சி விகிதமானது -0.09% ஆக இருந்தது.
- அதே சமயத்தில், தமிழகமானது 9.69% என்ற உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைந்தது.
- இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் பதிவாகாத அளவிற்கு அதிகமாகும் என்பதோடு கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பதிவான அதிகபட்ச வளர்ச்சி விகிதம் இதுவே ஆகும்.
- வழக்கமாக, பயிர்களின் பங்கு சராசரியாக 40% ஆகவும், கால்நடைகளின் பங்கு 50 சதவீதத்திற்கும் அதிகமாகவும் உள்ளது.

- கடந்த ஆண்டு, பயிர்களின் பங்கு விகிதமானது சுமார் 39% ஆக இருந்தது என்பதோடு பயிர்களைப் பொறுத்தவரையில், வளர்ச்சி விகிதமானது 2021-22 ஆம் ஆண்டில் 9.5% ஆகவும், அடுத்த ஆண்டு 3.3% ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 4.2% ஆகவும் இருந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவின் MFN மருந்து விலை நிர்ணயக் கொள்கை





- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் புதிய நிர்வாக உத்தரவானது, அமெரிக்க நாட்டவர்களுக்கு மருந்து விலைகளை சுமார் 30% முதல் 80% வரையில் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவிற்கு மிகவும் விரும்பத் தகுந்த தேசம் (MFN) என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றும் இந்த உத்தரவில் முன்மொழியப்பட்டது.
- அதாவது, மருந்து நிறுவனங்கள் அமெரிக்க நுகர்வோருக்கு விற்கும் போது, பிற வெளி நாடுகளில் விற்பனை செய்யும் குறைந்த விலையை நிர்ணயிக்குமாறு கோரப்படும்.
- MFN கொள்கை முதன்மையாகப் பகுதி B என வகைப்படுத்தப்பட்ட மருத்துவ நலத் திட்டம் / மெடிகேர் (ஒரு கூட்டாட்சிச் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம்) மருந்துகளை இலக்காக நிர்ணயிக்கிறது.
- வழக்கமாக, மருத்துவரின் பரிந்துரை அவசியமான மருந்துகளானது ஆஸ்திரேலியா, கனடா மற்றும் பிரான்சு ஆகியவற்றினை விட அமெரிக்காவில் சராசரியாக இரண்டு முதல் நான்கு மடங்கு விலை அதிகமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பெரிய துறைமுகங்களின் சாதனைகள்

- 2024-25 ஆம் நிதியாண்டில், பெரிய துறைமுகங்களின் சரக்குக் கையாளுதலில் சுமார் 4.3% என்ற அதிகபட்ச வருடாந்திர வளர்ச்சி விகிதம் பதிவாகியுள்ளன.
- 2023-24 ஆம் நிதியாண்டில் 819 மில்லியன் டன்களாக இருந்த இது 2024-25 ஆம் நிதி ஆண்டில் ~855 மில்லியன் டன்களாக அதிகரித்துள்ளது.

- ❖ இந்த வளர்ச்சிக்குக் காரணம், கொள்கலன்களின் போக்குவரத்து (10% வரை), உரங்கள் (13%), பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் உராய்வு/உயவு எண்ணெய் (POL) (3%), மற்றும் இதர பொருட்கள் (31%) ஆகியவற்றின் அளவு அதிகரித்தது.
- ❖ ஒடிசாவின் பாராதீப் துறைமுக ஆணையம் (PPA) மற்றும் குஜராத்தின் காண்ட்லா தீன்தயாள் துறைமுக ஆணையம் (DPA) ஆகியவை சரக்கு கையாளுதலில் சுமார் 150 மில்லியன் டன் (MT) வரம்புகளைக் கடந்து ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல்லை எட்டி உள்ளன.
- ❖ கூடுதலாக, நவி மும்பையின் ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் (JNPA) ஆனது, 20 அடி கொள்கலனுக்குச் சமமான (TEU – Twenty Foot Equivalent Unit) சுமார் 7.3 மில்லியன் என்ற ஏற்றுமதி அளவினை எட்டியது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### லூபின் - ஸ்பெயின் GPS




- ❖ ஸ்பெயின் நாட்டின் ஒரு தொழில்நுட்ப நிறுவனமான GMV ஆனது, நிலவிற்கான GPS போன்ற வழிகாட்டுதல் அமைப்பினை வெளியிட்டுள்ளது.
- ❖ LUPIN என்று பெயரிடப் பட்டுள்ள இந்த முக்கியத் திட்டமானது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- கூகுள் மேப்ஸ் அல்லது வேஸ் போன்ற செயலிகள் உதவியுடன் நகரம் முழுவதும் நாம் பயணம் செய்வது போல நிலவு ஆய்வுப் பயணங்களை மேற்கொள்வதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## யாலா பனிப்பாறை

- நேபாளத்தின் யாலா பனிப்பாறை "அழிந்து விட்டதாக" அறிவிக்கப்பட்ட முதல் நேபாள பனிப்பாறை என்று நம்பப்படுகிறது.
- இது இந்து குஷ் இமயமலையில் உள்ள 54,000 பனிப்பாறைகளில் ஒன்றாகும்.
- யாலா பனிப்பாறையானது ஏற்கனவே சுமார் 66 சதவீதம் குறைந்து, 1970 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 800 மீட்டர் பின்னடைந்துள்ளது.
- யாலாவானது எழுத்தாளரான ஆண்ட்ரி ஸ்னேர் மேக்னசனின் நினைவாக அவரது சொற்கள் பொறிக்கப்பட்ட பனிப்பாறை அமைந்திருக்கும் ஆசியாவின் முதல் பனிப் பாறை மற்றும் உலகளவிலான மூன்றாவது பனிப்பாறை ஆகும்.
- உலக வானிலை அமைப்பின் கூற்றுப்படி, 2022 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான காலக் கட்டத்தில் மிகப்பெரிய பனிப்பாறை பரவல் இழப்பு பதிவானது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய மின்சார வாகனக் கண்ணோட்ட அறிக்கை 2025


- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய மின்சார வாகனக் கண்ணோட்ட அறிக்கையானது சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில் 17 மில்லியனைத் தாண்டிய மின்சாரக் கார்களின் உலகளாவிய விற்பனையானது, 2025 ஆம் ஆண்டில் 20 மில்லியனைத் தாண்டும் நிலையில் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளாவிய மின்சாரக் கார்களின் இருப்பானது சுமார் 58 மில்லியனை எட்டியது, அதாவது மொத்தப் பயணிகள் கார் உற்பத்தி தொகுப்பில் 4 சதவீதத்தினை எட்டியது.
- அவை அந்த ஆண்டில் ஒரு நாளைக்கு 1 மில்லியன் பீப்பாய்களுக்கு மேலான (mb/d) எண்ணெய் நுகர்விற்கு மாற்றாக அமைந்தது.

- சீனா, அதன் மலிவு விலையிலான சில வகைகளுடன், 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய ஏற்றுமதியில் சுமார் 40% பங்கைக் கொண்டு உலகளாவிய மின்சார கார் ஏற்றுமதியில் முன்னிலை வகித்தது.
- 2024 ஆம் ஆண்டில் தாய்லாந்தில், ஒரு சீன மின்சார வாகனத்தின் சராசரி விலை ஆனது ஒரு வழக்கமான காரின் சராசரி விலையை விட குறைவாக இருந்தது.
- பிரேசில் நாட்டில், சீன மின்சார கார் இறக்குமதிகள் 2024 ஆம் ஆண்டில் நாட்டின் மின்சார வாகன விற்பனையில் 85 சதவீதத்தை எட்டின.
- இந்தியாவில், மிக அதிக இறக்குமதி வரிகள் மற்றும் உள்ளூர் வகைகளின் கிடைக்கும் தன்மை ஆகியவை, சந்தையில் சீன மின்சார வாகனங்களின் பங்கினைச் சுமார் 15 சதவீதத்திற்கும் குறைவாக மட்டுப்படுத்தியது.
- அமெரிக்கா மற்றும் கனடா ஆகியவை 100 சதவீதத்திற்கும் அதிகமான அளவிலான கட்டணங்களை விதித்தன.




# மாநிலச் செய்திகள்

## ட்சரப் சூ வளங்காப்பகம்




- இமாச்சலப் பிரதேச அரசானது ட்சரப் சூ வளங் காப்பகத்தினை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

- 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் 36A (1)வது பிரிவின் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- பனிச்சிறுத்தைகள் அதிகம் காணப்படும்/அடர்வு கொண்ட இமாச்சலப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இது ஒன்றாகும்.
- இது இமாச்சலப் பிரதேசத்தின் ஐந்தாவது வளங்காப்பகமாக தர்லகாட், நைனா தேவி, பாட்டர் ஹில் மற்றும் ஷில்லி ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.

### நீர்வளப் பாரம்பரிய அருங்காட்சியகம் – கோழிக்கோடு

- நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை மையத்தினால் (CWRDM) இயக்கப்படுகின்ற கோழிக்கோட்டில் உள்ள நீர் வளப் பாரம்பரிய அருங்காட்சியகம் ஆனது உலகளாவிய நீர் வள அருங்காட்சியக வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான நீரியல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படும் ஒரு முன்னெடுப்பு இதுவாகும்.
- இந்தியாவில், இந்தப் பெரும் மதிப்புமிக்க சர்வதேச வலையமைப்பில் சேர்க்கப்படும் மூன்றாவது அருங்காட்சியகம் இதுவாகும்.
- இந்த உலகளாவிய வலையமைப்பு ஆனது நீரின் கலாச்சார முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும் மிகவும் நிலையான நீர் மேலாண்மையில் சமூகப் பங்களிப்பை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### நீதிபதி பேலா. M திரிவேதி

- உச்ச நீதிமன்ற நீதிபதி பேலா திரிவேதி சமீபத்தில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- உச்ச நீதிமன்றத்தின் 75 ஆண்டுகால வரலாற்றில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற பதினொன்றாவது பெண் நீதிபதி இவர் ஆவார்.
- 1995 ஆம் ஆண்டில் குஜராத்தின் அகமதாபாத்தில் ஒரு நகர உரிமையியல் நீதிமன்ற நீதிபதியாக தனது பணியைத் தொடங்கினார்.
- அவர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட போது அவரது தந்தையும் அதே நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் பணியாற்றினார்.
- லிம்கா புக் ஆஃப் இந்தியா ரெகார்ட்ஸ் ஆனது, அதன் 1996 ஆம் ஆண்டு பதிப்பில் "ஒரே நீதிமன்றத்தில் நீதிபதிகளாக பணியாற்றிய அப்பா-மகள்" என்று பதிவு செய்துள்ளது.

- 2004 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் குஜராத் மாநில அரசாங்கத்தின் சட்டச் செயலாளராகவும் அவர் பணியாற்றினார்.
- அவர் 2011 ஆம் ஆண்டில் குஜராத் உயர் நீதிமன்றத்திற்கு பதவி உயர்த்தப் பட்டார்.
- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று அவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப் பட்டார்.




# விளையாட்டுச் செய்திகள்

## நீரஜ் சோப்ராவின் தேசிய சாதனை




- 2025 ஆம் ஆண்டு தோஹா டைமண்ட் லீக் போட்டியில் நீரஜ் சோப்ரா 90.23 மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து 90 மீட்டர் தூர வரம்பினை முறியடித்தார்.
- இந்தப் பெரும் சாதனையானது ஒரு புதிய தனிப்பட்ட நபரின் சிறந்த மற்றும் தேசிய


சாதனையாக அமைந்ததுடன், ஈட்டி எறிதலில் 90 மீட்டர் தூரம் வரை ஈட்டி எரிந்துள்ள வீரர்கள் குழுவில் இணைந்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

- ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியின் வரலாற்றில் சுமார் 90 மீட்டர் தூரச் சாதனையினை முறியடித்த 25வது மனிதர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.


# முக்கிய தினங்கள்

## உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் 2025 - மே 18

- எச்.ஐ.வி/எய்ட்ஸுக்கு எதிரான தொடர்ச்சியான பெரும் போராட்டத்தை முன்னிலைப் படுத்தவும், எச்.ஐ.வி தடுப்பூசி ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் ஒரு உலகளாவிய தளமாக இது செயல்படுகிறது.
- 1997 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று, அப்போதைய அமெரிக்க நாட்டு அதிபர் பில் கிளிண்டன், எச்.ஐ.வி தடுப்பூசியை உருவாக்குவதற்கான மிகப்பெரும் உலகளாவிய முன்னெடுப்பிற்கு அழைப்பு விடுத்தார்.
- கிளின்டனின் இந்த உரையின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், 1998 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று இந்தத் தினம் முதலில் கொண்டாடப்பட்டது.
- உலகளவில் சுமார் 40 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி பாதிப்புடன் வாழ்கின்றனர் மற்றும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான அளவு புதிய தொற்றுகள் பதிவாகின்றன.




## சர்வதேச அருங்காட்சியகத் தினம் 2025 - மே 18




- கலாச்சாரப் பரிமாற்றம், கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் அருங்காட்சியகங்களின்

முக்கியப் பங்கை எடுத்துக்காட்டும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

- இது 1977 ஆம் ஆண்டில் சர்வதேச அருங்காட்சியக சபையினால் (ICOM) நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'The Future of Museums in Rapidly Changing Communities' என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## புதிய கல்வெட்டுகள் - ஊட்டத்தூர்

- தமிழக மாநிலத் தொல்பொருள் துறையானது, திருச்சியின் ஊட்டத்தூர் கிராமத்தில் உள்ள சுத்தரத்தனேஸ்வரர் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட புதியக் கல்வெட்டுகளில் உள்ள தகவல்களின் பொருள் கண்டுணர்ந்துள்ளது.
- இந்தக் கோயில் ஆனது விக்ரமச் சோழனின் (1118-1135) காலத்தைச் சேர்ந்தது என்று நம்பப் பட்டது.
- ஆனால் இந்தப் புதியக் கல்வெட்டுகள், முதலாம் பராந்தக சோழனின் (907-955) ஆட்சிக் காலத்திலிருந்தே இந்தக் கோயில் இருப்பதாகக் காட்டுகின்றன.
- ஓர் ஆய்வின் போது, இக்கோயிலில் 12 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன.
- முழுமையாகப் படிக்கக் கூடிய வகையில் அமைந்த ஐந்து கல்வெட்டுகளில், நான்கு சோழர்களின் காலத்திலும், ஒன்று பாண்டியர்களின் காலத்திலும் பொறிக்கப்பட்டவை ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★